பக்கங்கள் 18+ 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆவணி 07 சனிக்கிழமை 23.08.2025 | அதிர்வு 23

## அர்ஜுன் மகேந்திரனுக்கு நீதிமன்றம் அழைப்பாணை



மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனை

04▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



## கொழும்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட ரணில்

சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில், தனது மனைவியான பேராசிரியர் மைத்ரி விக்கிரமசிங்கவின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்வதற்காக லண்டனுக்குத் தனிப்பட்ட விஜயம் செய்வதற்காக அரச நிதியைத் தவறாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டின் கீழ் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் கைது

04▶

# ரணிலின் கைது அரசின் அரசியல் பழிவாங்கலே!

## சிறிய குற்றங்களுக்காக அரசியல் தலைவர்களை சிறையில் அடைக்காதீர் என்றும் மஹிந்த காட்டம்



அரசியல் பழிவாங்கல்களைத் தவிர இந்த அரசால் வேறு எந்த நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முன்னாள் ரணில் விக்கிரமசிங்கவை இன்று முற்பகல் சிறைச்சாலை வைத்தியசாலையில் பார்வையிட்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துரைக்கும் போதே மஹிந்த மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

05▶



# நாட்டின் ஜனநாயகம் கேள்விக்குறி

## ரணிலைப் பார்வையிட்ட பின் சஜித் இப்படி தெரிவிப்பு

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கைது தொடர்பில் மூன்றாம் தரப்பினர் ஒருவர் முன்கூட்டியே கணித்திருக்கின்றமை நாட்டின் ஜனநாயகத்தையும் நீதித்துறை மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையையும் கேள்விக்குள்ளாக்கியுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கைது செய்யப்பட்டு விளக்கமறியில் வைக்கப்பட்டு, பின்னர் சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பார்வையிட்டு நலம் விசாரிப்பதற்காக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சிறைச்சாலை வைத்தியசாலைக்கு இன்று சனிக்கிழமை காலை சென்றிருந்தார்.

அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்

“சமூக ஊடகங்களில் சட்டம் தொடர்பாக கணிப்புகளை வெளியிடுவது நீதிமன்றத்தை அவமதிக்கும். சட்டத்தின் ஆட்சி மற்றும் நீதித்துறை செயல்முறைகள் நடைமுறைப்படுத்தப்படும் போது, சட்டத்தில் குறிப்பிடப்படாத ஒரு மூன்றாம் தரப்பு நபர் அதன் இறுதி விளைவை கணிக்க முடியாது. இத்தகைய நிலைமை மிகவும் ஆபத்தானது.

ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக, பொதுமக்கள் சட்டத்தின் சரியான அமுலாக்கத்தில் நம்பிக்கை வைக்க வேண்டும். சட்டத்தின் சரியான அமுலாக்கமும், அது குறித்த பொதுமக்களின் புரிதலும் முக்கியமானது. ஒரு நபர் சமூக ஊடகங்களில் கணிப்புகளை வெளியிடுவதால் ஒரு பயங்கரமான நிலைமை எழுந்துள்ளது.




சட்ட நடவடிக்கைகளின் விளைவுகளை மூன்றாம் தரப்பினர் அறிவதாகக் கூறுவது பொருத்தமற்றது மற்றும் சட்டவிரோதமானது. இத்தகைய சந்தர்ப்பங்களில் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சிறைச்சாலை வைத்தியசாலையில் சந்தித்தேன், அவர் நலமாக உள்ளார். அவரது உடல்நிலையும் பாதுகாக்கப்பட வேண்டும். மேலும் அவரது மருந்துகள் முறையாக வழங்கப்படும் என்று நாங்கள் நம்புகின்றோம்.” - என்றார்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில், தனது மனைவியான பேராசிரியர் மைத்ரி விக்கிரமசிங்கவின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்வதற்காக இலண்டனுக்குத் தனிப்பட்ட விஜயம் செய்வதற்காக அரச நிதியை தவறாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் கைது செய்யப்பட்ட நிலையில் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் அவரை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதனையடுத்து, உயர் இரத்த அழுத்தம் மற்றும் அதிக சர்க்கரை அளவு காரணமாக மருத்துவ ஆலோசனையின் பேரில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்நிலையில், சிங்கப்பூரில் இருந்து நேற்று வெள்ளிக்கிழமை இரவு நாடு திரும்பிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிமசிங்கவை இன்று சனிக்கிழமை காலை பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது.








# செம்மணியில் 'நீதியின் ஓலம்' கையெழுத்துப் போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

சர்வதேச நீதி கோரி ஒன்பது கோரிக் கைகளை முன்வைத்து "நீதியின் ஓலம்" கையெழுத்துப் போராட்டம் இன்று சனிக்கிழமை யாழ். செம்மணியில் முன்னெடுக்கப்பட்டது.

தாயகச் செயலணி அமைப்பினரால் தமிழினப் படுகொலைக்குச் சர்வதேச நீதி கோரலை வலியுறுத்தியே இந்த "நீதியின் ஓலம்" எனும் கையெழுத் துப் போராட்டம் முன்னெடுக்கப்படு கின்றது.

இந்தப் போராட்டம் இன்று காலை 10 மணியளவில் மாணவி கிருசாந்தி கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய செம்மணிப் பகுதியில் அணையா விளக்கு போராட்ட தூபி அமைந்துள்ள இடத்தில் முன்னெடுக்கப்பட்டது.

மரணித்த உறவுகளை நினைவு கூர்ந்து மௌன வணக்கம் செலுத்தப் பட்டு நினைவுச் சுடர் ஏற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டு ஆரம்பமான இந்த நிகழ்வில் நிகழ்வின் வடக்கின் ஏற்பாடுக் குழு இணைபாளர் ஜெயசித்திரா போராட் டத்தின் நோக்கம் குறித்து உரையாற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

தொடர்ந்து கையெழுத்துப் பெறும் நிகழ்வு ஆரமிக்கப்பட்டது. தொடர்ந்து ஐந்து நாட்களுக்குத் தமிழர் தாயக மெங்கும் இந்தக் கையெழுத்துப் போராட் டம் முன்னெடுக்கப்படும்.

இந்தக் கையெழுத்துப் போராட்டத் தின் ஊடாக இதுவரை கண்டுபிடிக்கப் பட்ட செம்மணி உட்பட்ட அனைத்து மனிதப் புதைகுழிகளுக்கும் முழுமை யான சர்வதேச நீதி விசாரணை நடை பெற வேண்டும் என் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை மீது வலுவான தீர்மானம் கொண்டு வந்து, அனைத்து நாடுகளும் தெளி வான நிலைப்பாடு எடுக்க வேண்டும் எனவும் இந்த போராட்டம் வலியுறுத்து கின்றமை குறிப்பிடத்தக்கது.



















## அர்ஜுன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.

எதிர்வரும் 26ஆம் திகதி நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு அவருக்கு இந்த அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டு பெரும் பரபரப்பை ஏற்படுத்திய மத்திய வங்கி பிணைமுறி மோசடி சம்பவத்தில் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜ/ன் மகேந்திரன் சந்தேகநபராகப் பெயரிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்ட நிலையில் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் அவரை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதையடுத்து, உயர் இரத்த அழுத்தம் மற்றும் அதிக சர்க்கரை அளவு காரணமாக மருத்துவ ஆலோசனையின் பேரில் ரணில் விக்கிரமசிங்க சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்படடார்.

உடல்நலக் குறைவு காரணமாக ரணில் விக்கிரமசிங்கவுக்கு வீட்டில் இருந்து கொண்டுவரப்படும் உணவுகளை வழங்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

இந்நிலையில், ரணில் விக்கிரமசிங்கவின் உடல் நிலையைக் கருத்தில் கொண்டு அவரைக் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றுவதற்கு சிறைச்சாலை வைத்தியர்கள் தீர்மானித் தனர்.

அதற்கமைய சிறைச்சாலை தலைமையகத்தின் அனுமதியுடன் ரணில் விக்கிரமசிங்க, கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு இன்று பிற்பகல் மாற்றப்பட்டுள்ளார்.







# சுண்டிக்குளத்தில் வாள் வெட்டு! மட்டக்களப்பு வாசி உயிரிழப்பு!!

வாள் வெட்டுச் சம்பவத்தில் மட்டக்களப்பைச் சேர்ந்த கடற்றொழிலாளி ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் சின்னத்தம்பி வடிவேல் என்பவரே உயிரிழந்துள்ளார்.

யாழ். வடமராட்சி கிழக்கு , சுண்டிக் குளம் பகுதியில் வெளிமாவட்ட கடற்றொழிலாளர்கள் வாடி அமைத்து கடற்றொழிலில் ஈடுபட்டுள்ளார்கள்.

நேற்று வெள்ளிக்கிழமை இரவு வாடியில் இருந்த இரு கடற்றொழிலாளர்களுக்கிடையில் கருத்து மோதல் ஏற்பட்டு வாள் வெட்டில் முடிந்தது.

அதில் ஒருவர் உயிரிழந்துள்ள நிலையில், மற்றையவர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

சம்பவம் தொடர்பில் மருதங்கேணி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# கிளிநொச்சியிலும் வாள் வெட்டு!

## தாயும் மகனும் படுகாயம்

கிளிநொச்சி – தர்மபுரம் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை மனநலம் பாதிக்கப்பட்டவரின் வாள் வெட்டுக்கு இலக்கான தாயும் மகனும் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் தாயார் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மனநலம் பாதிக்கப்பட்டவரைப் பொலிஸார் கைது செய்துள்ளதுடன் நீதிமன்ற அனுமதியுடன் வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

எசம்பவம் தொடர்பாக தர்மபுரம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருின்றனர்.



# யாழில் திடீரென நிறுத்தப்பட்ட இசை நிகழ்வு

யாழ்ப்பாணத்தில் இன்று சனிக்கிழமை நடைபெறவிருந்த இசை நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இன்று மாலை மாபெரும் இசை நிகழ்வுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

“யாழ் . மண்ணே வணக்கம்” எனும் இசை நிகழ்வில், தென்னிந்திய பிரபல பாடகர்களான மனோ, சைந்தவி, கார்த்திக், தீப்தீ, இசையமைப்பாளர் சிற்பி




ஆகியோர் கலந்துகொள்ளவிருந்தனர்.

இசை நிகழ்வுக்காகச் சில கலைஞர்கள் தென்னிந்தியாவில் இருந்து யாழ்ப்பாணம் வருகை தந்திருந்த நிலையில், திடீரென இசை நிகழ்வு பிற்போடப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இசை நிகழ்வுக்காக 10 ஆயிரம் ரூபா, 5 ஆயிரம் ரூபா, 3ஆயிரம் ரூபா மற்றும் 1500 ரூபா ஆகிய விலைகளில் நுழைவுச்சீட்டுக்களும் விற்பனை செய்யப்பட்டிருந்தன.

நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்றும், நிகழ்வு பிறிதொரு தினத்தில் நடத்தப்படும் என்றும், அதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் ஏற்பாட்டாளர்கள் கூறியுள்ளனர்.

## ரணிலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் தலைவர்கள் சிறிய குற்றங்களுக்காகச் சிறையில் அடைக்கப்படுவது குறித்து தனது வருத்தத்தையும் மஹிந்த இதன் போது வெளிப்படுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நீங்கள் அரசியலில் ஈடுபட்டால், அது உங்கள் வாழ்க்கைப் பயணத்தின் ஒரு பகுதி. தற்போதைய அரசின் நடவடிக்கைகள் குறித்து மக்கள் சரியான புரிதலைக் கொண்டுள்ளனர். இந்த நடவடிக்கைகள் பழிவாங்கும் செயல்களைத் தவிர வேறொன்றும் இல்லை. மக்கள் அரசியல் தலைவர்களைத் தொடர்ந்து ஆதரித்து வருகின்றார்கள். நாம் மக்களை நேசிக்கின்றோம். அதனால்தான் மக்கள் நம்மை நேசிக்கின்றார்கள்.” – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நியாயமான கேள்வி

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கைது மற்றும் அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டமை ஆகியன இலங்கையில் ஜனாதிபதி பதவிக்கு 'ஓர் ஆபத்தான முன்னுதாரணம்' என்று மொறட்டுவை நகரசபை உறுப்பினர் லிஹினி பெர்னாண்டோ எச்சரித்துள்ளார். அவர் குறிப்பிடும் கருத்துகள் நோக்கற்பாலவை.

ஜனாதிபதி பதவியில் பொது மற்றும் தனியான வாழ்க்கைக்கு இடையில் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடும் விடயங்களை உள்ளார்ந்தமாக பிரிவுபடுத்தி, அதனடிப்படையில் குற்றமாக்குவது நாட்டின் மிக உயர்ந்த பதவியின் கண்ணியத்தை அச்சுறுத்துவதாகவும், எதிர்காலத் தலைவர்கள் அரசியல் பழிவாங்கல்களுக்கு ஆளாக வழி செய்யும் என்றும் பெர்னாண்டோ வாதிடுகின்றார்.

"எதிர்கால ஜனாதிபதிகள் பதவியில் இருக்கும்போது மிகவும் சாதாரண தனிப்பட்ட செயல்பாடுகளைச் செய்தமைக்காகக் கூட வழக்குத் தொடரப்படும் அபாயத்தைத் தொடர்ந்து எதிர்கொள்வார்கள். ஒரு ஜனாதிபதி தனது தனிப்பட்ட வாழ்க்கையை தனது பொதுப் பாத்திரத்திலிருந்து பிரிக்க முடியாது, ஏனெனில் அவரது பாதுகாப்பு, இயக்கங்கள் மற்றும் ஈடுபாடுகள் முழுவதுமாக அரசால் கட்டுப்படுத்தப்படுகின்றன" என்று லிஹினி பெர்னாண்டோ கூறுவதில் அர்த்தம் இருக்கின்றது.

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவு அரசமைப்பு ரீதியாக ஒரு ஜனாதிபதியுடன், அவை உத்தியோகபூர்வ கூட்டங்கள், தனிப்பட்ட விழாக்கள் அல்லது வெளிநாடுகளுக்குச் சென்றாலும், எல்லா நேரங்களிலும் உடன் செல்லக் கடமைப்பட்டுள்ளது என்று பெர்னாண்டோ விளக்கினார். இந்த நோக்கத்திற்காகவே அதற்கு ஒரு தனி அரச பட்ஜெட் ஒதுக்கப்பட்டுள்ளது, அதாவது தனிப்பட்ட நடவடிக்கைகளுக்கு ஜனாதிபதி பாதுகாப்பு நெறிமுறைகளை இடைநிறுத்த முடியாது என்று அவர் சுட்டுகின்றார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் தனது மனைவியின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்ள லண்டனில் தங்கினார். அவரது பாதுகாப்புப் பணியாளர்களுக்கான விமானக் கட்டணம் உட்பட தொடர்புடைய செலவுகள் பின்னர் பொதுச் சொத்துச் சட்டத்தின் கீழ் பொது நிதியை தவறாகப் பயன்பட்டன எனக் கருதப்பட்டன. இது அவரைக் கைது செய்து விளக்க மறியலில் வைக்க வழி வகுத்தது.

"அதுதான் அளவுகோல் என்றால், அதே சட்டம் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவிற்கும் பொருந்தும். அவர்தனது தாயாரைப் பார்ப்பதற்கும் தேசிய மக்கள் சக்தியின் அரசியல் கூட்டங்களில் கலந்து கொள்வதற்கும் தனது அதிகாரப்பூர்வ வாகனம், அரசு வழங்கிய எரிபொருள் மற்றும் ஜனாதிபதி பாதுகாப்பைப் பயன்படுத்தியுள்ளார். அதே தர்க்கத்தின்படி, அந்த நடவடிக்கைகள் அரச வளங்களை அவரும் தவறாகப் பயன்படுத்துகின்றார் என்றுதானே அர்த்தம்?" என்று பெர்னாண்டோ கேள்வி எழுப்புகின்றார்.

வழக்காறுகளின் படி, ஜனாதிபதியின் ஒவ்வொரு இயக்கமும் - அது அதிகாரப்பூர்வமானதாகவோ அல்லது தனிப்பட்டதாகவோ இருந்தாலும் - ஜனாதிபதிப் பாதுகாப்புப் பிரிவினால் பாதுகாக்கப்படுகிறது. ஏனெனில் ஜனாதிபதி மக்களின் இறையாண்மையை வெளிப்படுத்தும் பதவி நிலையில் இருக்கின்றார்.

இந்த அடிப்படையை - உண்மையை - யதார்த்தத்தை - மறந்து, மறுத்து, மறைத்து ரணிலுக்கு எதிரான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. அதுதான் நிலைமை.




# சிறுவர் துஷ்பிரயோகம், துன்புறுத்தலுக்கு எதிராக நுவரெலியாவில் நடந்த பேரணி!

(ஆர்.எப்.எம்.சுஹைல் )

நுவரெலியா வலயக் கல்வி அலுவலகத்தின் கீழ் உள்ள பாடசாலைகளது மாணவர்கள், பெற்றோர்கள் இணைந்து இன்று (23) நுவரெலியா நகரில் குழந்தை துஷ்பிரயோகம் மற்றும் குழந்தை உரிமைகளைப் பாதுகாப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பேரணி நடத்தினர்.

நுவரெலியா புதிய நகர மண்டபத்தில் இருந்து ஆரம்பமாகிய பேரணி, நுவரெலியா நகர வீதிகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டது. குழந்தை துஷ்பிரயோகத்தை முற்றிலுமாக ஒழிக்கவும், குழந்தை துஷ்பிரயோகத்தை எதிர்க்கவும், அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் விளம்பரப் பலகைகள், பதாகைகள் போன்றவற்றைக் காட்சிப்படுத்தி பேரணி நடத்தப்பட்டது.

இந்த பேரணியைச் சுற்றுச்சூழல் மற்றும் அனைத்து இடங்களிலும் உள்ள சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்புகள் ஏற்பாடு செய்திருந்தன.

நுவரெலியா வலயக் கல்வி அலுவலகத்தின் கீழ் உள்ள அனைத்துப் பாடசாலைகளதம் மாணவர்கள், பெற்றோர்கள், அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களும் இந்த பேரணியில் கலந்து கொண்டனர்.









# சாவகச்சேரி நகர சபையின் தன்னிச்சையான செயற்பாடு!

## கிராம அபிவிருத்திச் சங்கக் கூட்டத்தில் கண்டனம்

சாவகச்சேரி நகர சபையின் தன்னிச்சையான சில செயற்பாடுகளுக்குக் கோவிற் குடியிருப்பு கிராம அபிவிருத்திச் சங்கம் வன்மையாக கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கோவிற்குடியிருப்பு கிராம அபிவிருத்திச் சங்கத்தினுடைய விசேட கூட்டம் நேற்று (22) வெள்ளிக்கிழமை பிற்பகல் சங்கத்தின் தலைவர் த.சுபேசன் தலைமையில் ஸ்ரீ முருகன் சனசமூக நிலைய கட்டடத்தில் இடம் பெற்றது.

இந்தக் கூட்டத்திலேயே சாவகச்சேரி நகர சபையின் தன்னிச்சையான சில செயற்பாடுகளுக்கு கோவிற்குடியிருப்பு கிராம அபிவிருத்திச் சங்கம் தனது வன்மையாக கண்டனத்தை தெரிவித்துள்ளது.

குறிப்பாகக் கோவிற்குடியிருப்பு உப்புக்கேணி குள வடிகால் அமைக்கவென நகரசபையின் முன்னாள் செயலாளரால் ஒதுக்கப்பட்ட 7 மில்லியன்



ரூபா நிதியில் வெறுமனே 5 லட்சம் ரூபா நிதியில் குளத்தைத் தூர்வார்ந்து விட்டு, மிகுதி 6.5 மில்லியன் ரூபா நிதியை ஏனைய வட்டார வீதி புனரமைப்புப் பணிகளுக்கு பகிர்ந்தளித்தமைக்கு தமது கண்டனத்தை வெளியிட்டது.

அது தொடர்பில் மாகாண ஆளுநர், அரச அதிபர் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டு சென்று, மீளவும் உப்புக்கேணி குள அபிவிருத்திக்கு மேற்படி நிதியை முழுமையாக பயன்படுத்த நடவடிக்கை எடுப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது.

உப்புக்கேணியின் மேலதிக நீர் கடலை சென்றடைய முடியாதிருப்பதால் அப்பகுதி மக்கள் வருடா வருடம் வெள்ள அனர்த்தத்தைச் சந்தித்து வருகின்றனர். இருந்த போதிலும் நகர சபை மக்களுடைய அவலத்தைக் கருத்தில் கொள்ளாது குள அபிவிருத்தி மற்றும் குளத்தின் மேலதிக நீரை கடத்தும் வடிகால் அமைக்க வரவு – செலவுத் திட்டத்தில் ஒதுக்கிய நிதியை, வேறு வட்டாரங்களுக்கு மாற்றும் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் கிராம அபிவிருத்திச் சங்கக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் கிராம அபிவிருத்திச் சங்க செயலாளர் க.தர்ஷன், நகர சபையின் தமிழரசுக் கட்சி உறுப்பினர் பவுலினா சுபோதினி, சங்கத்தின் பொருளாளர், சங்கத்தின் அங்கத்தவர்கள், ஆலோசகர்கள் கலந்து கொண்டிருந்தனர்.



# குழந்தை ம.சண்முகலிங்கம் நினைவாக ஆய்வு மாநாடும் நாடக ஆற்றுகையும்!

யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம் (சமூக விஞ்ஞானப் பிரிவு), செயல் திறன் அரங்க இயக்கம் இணைந்து நடத்தும் குழந்தை ம.சண்முகலிங்கம் நினைவு பன்னாட்டு பண்பாட்டு ஆய்வு மாநாடும் நாடக ஆற்றுகைகளும் எதிர்வரும் 31 திகதி யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளன.

தமிழ் அரங்கு மற்றும் கலைகளின் சமகால வெளிப்பாடுகள் என்ற தொனிப் பொருளில் மாநாடு நடைபெறவுள்ளது. இதற்குப் பிரதான திறப்புரையை வழங்குவதற்காக உலகப்புகழ்பெற்ற தொடர்பியல் துறைப் பேராசிரியர் கோ.இரவீந்திரன் இந்தியாவிலிருந்து வருகை தரவுள்ளார்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சற்குணராஜா கலந்து கொள்ளவுள்ளார்.

கலைப்பீடாதிபதி பேராசியரியர் எஸ். ரகுராம் சிறப்பு விருந்தினராக பங்கு கொள்கிறார்.

நிகழ்வு யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின் தலைவர் வைத்தியர் பி.ஏ. டினேஸ் கூன்ஜே தலைமையில் நடைபெறவுள்ளது.

ஆய்வு மகாநாடு நான்கு முக்கிய பகுதிகளாக நடைபெறவுள்ளது. காலை 9 –10 மணி வரை தொடக்கவிழாவும் அரங்கத் திறப்புரையும் நடைபெறும். 10.30 – 12.30 மணிவரை ஆய்வு அளிக்கைகளும் கலந்துரையாடல்களும் நடைபெறவுள்ளன.மாலை 2 – 3.30 மணிவரை குழு நிலைக் கலந்துரையாடல் நடை பெறவுள்ளது.

இதில் ஈழத்தின் தமிழ் நாடகத்தின் எதிர்காலம் என்ற தலைப்பில் கலந்துரையாடல் ஆளுமைகளின் கருத்துரைகள் பேராசிரியர் சி. மௌனகுரு தலைமையில் நடைபெறவுள்ளது.

மாலை 4 மணிக்குக் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் சிறுவர் நாடகங்களான பஞ்சவர்ண நரியார், கூடிவிளையாடு பாப்பா போன்ற நாடகங்கள் மேடையேறுகின்றன. இவற்றை செயல் திறன் அரங்க இயக்கம் தயாரித்து வழங்குகின்றது. அவற்றைத் தொடர்ந்து குழந்தை ம.சண்முகலிங்கத்தின் புகழ்பெற்ற நாடகமான 'எந்தையும் தாயும்' நாடகம் மேடையேறவுள்ளது.

இதனை மலையகத்திலிருந்து தியேட்டர் மேட்ஸ் நாடகக்குழுவினர் மேடையேற்றவுள்ளனர்.

ஈழத்து நவீன தமிழ் நாடகப்புலத்தில் பேராளுமையாகத் திகழ்ந்த குழந்தை ம.சண்முகலிங்கத்தின் இந்த நிகழ்வு நாடகர்கள், நாடகச் செயற்பாட்டாளர்கள், மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ள நிகழ்வாக அமையும். இதில் பங்கு கொள்ள நாடகத்துறை ஆர்வலர்களை, ஏற்பாட்டாளர்கள் அழைக்கின்றனர்.





# திருக்கோவில் மீனவர், விவசாயிகளது பிரச்சினைகள் விரைவில் தீர்க்கப்படும்

## தவிசாளர் எஸ்.சசிகுமார் தெரிவிப்பு

திருக்கோவில் பிரதேசத்திலுள்ள மீனவர்கள் மற்றும் விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர் என்று திருக்கோவில் பிரதேச சபையின் தவிசாளர் எஸ்.சசிகுமார் தெரிவித்துள்ளார்.

திருக்கோவில் பிரதேச மீனவ மற்றும் விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள், நீர்ப்பாசன திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் தவிசாளருக்குமிடையிலான விசேட சந்திப்பொன்று நேற்று முன்தினம் (21) இடம்பெற்றது.

திருக்கோவில் பிரதேச சபையின் தவிசாளர் எஸ்.சசிகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலின் போது குறித்த சங்கங்களின் பிரதிநிதிகள், நீர்ப்பாசனத் திணைக்கள உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். இதன்போது பல்வேறு பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டு விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

குறித்த பிரச்சினைகளை கேட்டறிந்த தவிசாளர் அவற்றை உடனடியாகத் தீர்க்கும் பொருட்டு சம்மந்தப்பட்ட அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு சில பிரச்சினைகளுக்கு தீர்வுகளையும் பெற்றுக்கொடுத்தார். மேலும் சில பிரச்சினைகளுக்கு எதிர்காலத்தில் தீர்வினைப் பெற்றுத் தருவார் என்றும் தவிசாளர் உறுதியளித்தார்.

மீனவர்கள் மற்றும் விவசாயிகளின் நலன்கருதி தவிசாளர் மேற்கொண்ட நடவடிக்கை பாராட்டத்தக்கது என்று அப்பகுதிகளில் உள்ள மக்கள் தவிசாளருக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.







## பெண் ஒருவரது முறைப்பாடுகளை அடுத்து

# சாவகச்சேரி நகர உப தவிசாளர், உறுப்பினர் பொலிஸ் விசரணைக்கு அழைக்கப்பட்டனர்!

சாவகச்சேரி நகர சபையின் உப தவிசாளர் மற்றும் உறுப்பினர் ஒருவருக்கு எதிராகப் பெண் ஒருவர் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

சாவகச்சேரி நகரசபையின் உப தவிசாளர் ஞா.கிஷோர் மற்றும் உறுப்பினர் கு.பிரணவராசா ஆகியோர் தன்னை அச்சுறுத்தி தொலைபேசியைப் பறித்தனர் என்று தெரிவித்தே அந்தப் பெண் சாவகச்சேரி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த முறைப்பாட்டுக்கு அமைய சாவகச்சேரி நகர சபையின் உப தவிசாளர் மற்றும் உறுப்பினர் இருவரையும் அழைத்த பொலிஸார் வாக்கு மூலம் எடுத்து விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் தெரிய வந்துள்ளதாவது,

சாவகச்சேரி நகர சபையால் கோவில் குடியிருப்பு உப்புக் கேணிக் குளம் தூர்வாரும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தூர்வாரும் பணிகளைக் கண்காணிக்கச் செல்லும் நகரசபை உறுப்பினர்களை அந்தப் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் அவதூறான வார்தைகளில் பேசியுள்ளார்.

இந்த நிலையில் இந்த மாதம் இடம் பெற்ற மாதாந்த சபை அமர்வில் உறுப்பினர்களால் குறித்த விடயம் விவாதிக்கப்பட்டது. உறுப்பினர்களின் கௌரவம் பாதுகாக்கப்பட வேண்டும் எனவும் சபையில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதையடுத்து இந்த மாதாந்த அமர்வு நிறைவடைந்ததும் தவிசாளர், உப தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் உப்புக் கேணிக்குக் கள விஜயம் மேற்கொண்டனர்.

இதன்போதும் அந்தப் பெண் நகர சபை உறுப்பினர்களைத் தகாத வார்த்தைகளில் பேசியதோடு வீடியோ பதிவும் செய்துள்ளார்.

இதையடுத்து உப தவிசாளர் கிஷோர், உறுப்பினர்களோடு மரியாதையோடு நடந்து கொள்ளுமாறும் நகர சபையின் பணிகளில் தலையிட வேண்டாம் எனவும் அந்தப் பெண்ணை எச்சரித்துள்ளார்.

இந்த நிலையில் உப தவிசாளர் கிஷோர் மற்றும் வட்டார உறுப்பினர் பிரணவராசா ஆகியோர் தன்னை அச்சுறுத்தினர் என்றும் தொலைபேசியை பறித்தனர் எனவும் சம்பந்தப்பட்ட பெண் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளார்.

இந்த நிலையில் உப தவிசாளர் கிஷோர் மற்றும் உறுப்பினர் பிரணவராசா ஆகியோர் நேற்று (22) சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு அழைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதன்போது முறைப்பாடு தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, நகர சபையின் அபிவிருத்திப் பணிகளிலும் உறுப்பினர்களின் பணிகளிலும் குறித்த பெண் தலையிட முடியாது என்றும் அபிவிருத்தி பணிகளில் குறைபாடு இருந்தால் நகர சபைக்கு எழுத்து மூலமாக அறிவிக்கலாம் எனவும் அந்தப் பெண்ணுக்கு எச்சரிக்கை விடுத்து விசாரணைகளை முடிவுறுத்தினர்.

# கும்பாபிஷேகப் பெருவிழா

சுன்னாகம் தெற்கு அருள்மிகு ஸ்ரீ சிவபூதராயர் தேவஸ்தான கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.15 மணி முதல் 10.15 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் நடைபெறவுள்ளது.

தேவஸ்தான பிரதம குரு கிரியாகலா ஜோதி சிவஸ்ரீ சிவசோம தீபதர்சன சிவாச்சாரியார் இந்தக் கும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பார். அன்றையதினம் மாலையில் விசேட திருவீதியுலாவும் நடைபெறும்.

27ஆம் திகதி கர்மாரம்பமும், 28 ஆம் திகதி எண்ணெய்க் காப்பும் இடம்பெறும்.





# உடப்பூர் திவ்விய ஒளி கலை மன்றத்தால் தமிழ் மகா வித்தியின் மாணவர் கௌரவிப்பு

(உடப்பு க.மகாதேவன்)

உடப்பூர் திவ்விய ஒளி கலை மன்றத்தால் உடப்பு ஆடித் திருவிழாவின் போது, மேடையில் நிகழ்த்தப்பட்ட கலை நிகழ்ச்சியில் உடப்பு தமிழ் மகா வித்தியாலயத்தில் இருந்து கலந்து கொண்ட மாணவர்களுக்கு சான்றிதழ்களும், பரிசில்களும் உடப்பு தமிழ் மகா வித்தியாலயத்தில் வைத்து வழங்கப்பட்டன.

இதில் பாடசாலையின் அதிபர் பூ.சுகந்தன், ஆசிரியர் சி.முன்னைநாதன் ஆகியோர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர்.

திவ்விய ஒளி கலை மன்றத் தலைவர் க.மகாதேவன், செயலாளர் வை.இராமச்சந்திரன், பொருளாளர் இ.கந்த மூர்த்தி, உறுப்பினர் வைரவசுந்தரம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.







# மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் புதைகுழியை தோண்டுமாறு கோரி மாநகர சபையில் பிரேரணை!

(கனகராசா சரவணன்)

சத்துருக்கொண்டான் தமிழின படு கொலை புதைகுழி தோண்டப்பட வேண் டும் என்று மட்டக்களப்பு மாநகர சபை அமர்வில் பிரேரணை கொண்டுவரப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த படுகொலையின் 35 ஆவது ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டுப் படு கொலை செய்யப்பட்டவர்களின் ஆத்ம சாந்தி வேண்டி சபையில் இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.



மட்டக்களப்ப மாநகர சபையின் 3 ஆவது மாதாந்த அமர்வு நேற்று முன் தினம் வியாழக்கிழமை (21) மாநகரசபை முதல்வர் சிவம் பாக்கியநாதன் தலை மையில் இடம்பெற்றது. இதன்போது தமிழரசுக் கட்சி உறுப்பினர் திருமதி தயாளன் கௌரி, சத்துருக்கொண்டான் படுகொலை நீதிகோரி புதைகுழி தோண்டப்பட வேண்டும் என பிரேரணை ஒன்றை முன்வைத்தார்.

இதன்போது பிரேரணை முன்வைத்து உரையாற்றிய அவர்,

கடந்த 1990-09-09 சத்துருக் கொண்டான் படுகொலை என்பது இந்த மாவட்டத்தில் பாரிய தமிழின படு கொலையாக நடந்தேறியது. குறிப்பாக யுத்த காலப் பகுதிகளிலே எங்களுடைய மாவட்டத்தில் அப்போது இராணுவ முகாம் அமைக்கப்பட்டது. அந்தப் பகுதி யில் பனிச்சையடி, திராய்மடு, பிள் ளையாரடி, கொக்குவில் சத்துருக்கொண் டான் கிராமங்களின் மக்கள் இடம் பெயர்ந்து நகரில் தஞ்சமடைந்து முகாம் களில் தங்கியிருந்தனர்.

இவர்கள் பகலில் தமது கிராமத்தில் உள்ள வீடுகளுக்கு சென்றுவரும் நிலை யில் 1990-09-09 மாலை 5.30 மணியளவில் இராணுவத்தினர் சுற்றி வளைத்து அங்கு இருந்த சிறியோர் தொடக்கம் முதியவர்வரைக்குமான 186 பேரை, ஒன்றுகூடல் என தெரிவித்து சத்துருக்கொண்டான் இராணுவ முகா முக்கு அழைத்துச் சென்று, இராணுவத் தினருடன் ஊர்காவல் படையினரும் இணைந்து, இராணுவ முகாமின் தளபதி வர்ணகுலசூரிய தலைமையில் துப்பாக் கியால் சுட்டும் வெட்டியும் படுகொலை செய்தனர்.

இந்தப் படுகொலையின் பின்னர் ஆட்சிக்கு வந்த சந்திரிக்கா அரசால், ஓய்வு பெற்ற நீதியரசர் பாலகிட்ணன் தலைமையில் ஆணைக்குழு நியமிக்கப் பட்டு விசாரணை இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் இருந்து தப்பி வந்தவர்கள் உட்பட உயிரிழந்தவர்களின் உறவுகள் பலர் சாட்சியங்கள் அளிக்கப் பட்டு இந்த படுகொலை நிரூபிக்கப்பட்ட படுகொலையாக காணப்பட்டது.

இந்தப் படுகொலை இடம்பெற்று எதிர்வரும் 9 ஆம் திகதி 35 ஆண்டுகள் நிறைவு பெறும் நிலையில் இந்த படுகொலைக்கான நீதி இதுவரை மறுக் கப்பட்ட ஒரு பாரிய படுகொலையாக இந்த மாவட்டத்தில் காணப்படுகிறது.

படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவுகள் ஒவ்வொரு வருடமும் நினை வேந்தலை அனுஷ்டிக்க அமைக்கப்பட்ட நினைவேந்தல் தூபிக்கு வரும்போது பொலிஸார் இராணுவத்தினர் சுற்றி வளைத்து அச்சுறுத்துகின்றனர். இதற்கு மத்தியில் அதைத் தாண்டி அஞ்சலி செலுத்தி வந்தனர்.

இருந்தபோதும் இப்போது ஆட்சிக்கு வந்த தேசிய மக்கள் சக்தி ஜனாதிபதி தற்போது செம்மணி புதைகுழி, மற்றும் ஊழல் மோசடிகளை அழிப்பதற்கு அனுமதி கொடுத்துள்ளதை நாங்கள் வரவேற்கிறோம்.

அதேபோல் ஐ.நாடுகள் மனித உரிமை ஆணையாளர் இலங்கை வந்து யாழ்ப்பாணம் செம்மணிக்குச் சென்று இந்த படுகொலைகளுக்கு உள் நாட்டு பொறிமுறைக்குள் தீர்மானிக் கப்பட வேண்டும் என அறிக்கை விடுத்தார்.

ஆட்சிக்கு வந்துள்ள ஜனாதிபதி தேர்தல் காலத்தில் பல விடயங்களைச் செய்வதாக தெரிவித்தார். இந்த நிலை யில் இதற்கான நீதியையும் வேண்டி நிற்கின்றோம்

இந்தப் படுகொலையில் நானும் இறந்திருக்க வேண்டியவள். அப்போது எனக்கு 4 வயது. அன்றைய தினம் சுற்றிவளைப்புக்கு ஒரு சில மணித்தி யாலத்துக்கு முன்னர் நாங்கள் அங்கி ருந்து வெளியேறி நகரிலுள்ள நலன்புரி முகாமுக்கு வந்தபடியால் தப்பிக் கொண்டேன்.

எனவே உண்மை ஒருநாளும் உறங்காது. செம்மணிப் புதைகுழி இன்று தோண்டப்பட்டுக் கொண்டிருக் கின்றது. அதுபோல் சத்துருக்கொண் டானில் படுகொலை இடம்பெற்ற அப் போதைய இராணுவ முகாம் இருந்த இடம் தோண்டப்பட வேண்டும் என்ற இந்தப் பிரேரணை எமது உறுப்பினர் களின் ஆதரவுடன் கொண்டுவரப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்த தீர்மானத்தை ஜனாதிபதி, பிரதமர், ஐ.நா. மனித உரிமை ஆணை யர் ஆகியோருக்கு அனுப்பி நீதி கிடைக் கச் செய்ய வேண்டும்.- என்றார்.



# பயங்கரவாத சட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்ட தமிழ் பேசுவோருக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும்

## அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார் கிண்ணியா பிரதேச சபை உறுப்பினர் அப்துல் ஹசன் மொஹம்மது பஷீர்

(ஹஸ்பர் ஏ.எச்.)

பயங்கரவாதச் சட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்ட தமிழ் பேசும் அனைவருக்கும் நஷ்ட ஈட்டினை அரசு வழங்க வேண்டும். பயங்கரவாத தடுப்புச் சட்டமானது உடனடியாக நீக்கப்பட வேண்டும். இந்தச் சட்டத்தால் பாதிக்கப்படுபவர்கள் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்களே.

இவ்வாறு திருகோணமலை மாவட்ட நல்லாட்சிக்கான தேசிய முன்னணி கட்சியின் மாவட்டப் பிரதி அமைப்பாளரும் கிண்ணியா பிரதேச சபை உறுப்பினருமான அப்துல் ஹசன் மொஹம்மது பஷீர் தெரிவித்தார்.

நேற்று (22) காலை கிண்ணியாவில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் ,

பயங்கரவாதத் தடுப்புச் சட்டமானது இலங்கையில் அவசரமாக நீக்கப்பட வேண்டும். அரசு ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் இந்தச் சட்டத்தை நீக்குவதாக கூறியது. ஆனால் ஆட்சிக்கு வந்த பின்னரும் அச்சட்டத்தை இன்னும் நீக்கவில்லை.இது சிறுபான்மை சமூகத்தினருக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சட்டம் 1978 ஆம் ஆண்டு தற்காலிக சட்டமாகவும், 1979 ஆம் ஆண்டு நிரந்தரச் சட்டமாகவும் ஆக்கப்பட்டது.

இந்தச் சட்டத்தை உள்ளூர் மனித உரிமை அமைப்புகளும், சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் இல்லாமல் செய்ய வேண்டும் என்ற கருத்தை மிக வலுவாக வலியுறுத்தி வருகின்றார்கள்.

தற்போது ஆட்சியில் இருக்கும் அரசு கூட ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் குறித்த சட்டத்தை இல்லாமல் செய்ய வேண்டும். இது நாட்டுக்கும் ஆபத்தானது என்ற கருத்தைத் தெரிவித்துக் கொண்டிருந்தனர்.

ஆகவே, இவர்கள் சொல்வதைப் போன்று இந்தச் சட்டத்தை அரசு இல்லாமல் செய்ய வேண்டும்.

இந்தச் சட்டமானது தமிழ் பேசும் இனத்துக்கு எதிராக மிகக் கடுமையாகப் பிரயோ கிக்கப்பட்டிருப்பதையும் , அதன் மூலம் சொல்லெனாத் துயரங்களை நம் மக்களில் சிலர் அனுபவித்திருப்பதையும் நாங்கள் பார்க்கின்றோம்.

அண்மையில் கூட இரண்டு முஸ்லிம் இளைஞர்கள் குறிப்பாக ருஷ்டி மற்றும் மாவனல்லையை சேர்ந்த சுஹைல் என்னும் சகோதரர்கள் இந்தச் சட்டத்தின் மூலம் கடுமையாக பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

குறித்த சட்டமானது 90 நாள்கள்



நீதிமன்றத்தின் விசாரணையோ, அழைப்பானையோ இன்றி கைது செய்து அடைத்து வைத்து தண்டனை வழங்குவது என்ற விடயங்களுக்கு வழிசமைக்கின்றது. காலத்தை நீடித்தும் தண்டனை வழங்க கூடியதாகவும் இருக்கின்றது.

இது மிக தெட்டத் தெளிவான மனித உரிமை மீறலான செயலாக காணப்படுவதை மனித உரிமை சம்பந்தமாக அறிவுள்ள அனைவரும் புரிந்து கொள்வார்கள், விளங்கிக் கொள்வார்கள்.

இந்தச் சட்டம் மனித உரிமைகளை அப்பட்டமாக மீறுகின்ற சட்டமாகக் காணப்படுகிறது. எனவே இந்தச் சட்டத்தை இந்த நாட்டிலிருந்து அரசு உடனடியாக இல்லாமல் செய்ய வேண்டும்.

அத்துடன் இந்தச் சட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்ட தமிழ் பேசும் அனைவருக்கும் நஷ்ட ஈட்டை அரசு வழங்க வேண்டும்.– என்றார்.





# திருமலை மக்கள் சேவை மன்றத்தால் ஐந்து நிரந்தரவீடுகள் பயனாளிகளுக்கு!

**(ஹஸ்பர் ஏ.எச்.)**

வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு நிரந்தரவீடுகள் நிர்மாணிக்கப்பட்டு அவை பயனாளிகளுக்கு கையளிக்கும் முதற்கட்ட நிகழ்வு நேற்று முன்தினம் (21) மன்றத்தின் தலைவரும் மனிதாபிமான செயற்பாட்டாளருமான எம். ரீ. எம். பாரிஸ் தலைமையில் இடம் பெற்றது.

கடந்தகால போர்ச்சூழல் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக வறுமைக் கோட்டின் கீழ் வாழும், அடிப்படை தங்குமிட வசதிகள் இல்லாத குடும்பங்களுக்கு திருகோணமலை மக்கள் சேவை மன்றத்தால் இந்த நடப்பாண்டில் 40 நிரந்தர வீடுகள் சிலி நாட்டை தலைமையமாகக் கொண்ட சர்வதேச தொண்டு நிறுவனமான செலவிப் பவுண்டேன் நிறுவனத்தின் நிதி அனுசரணையில் நிரந்தர வீடுகள் நிர்மாணிக்கப்பட்டன. இவற்றில் முதற்கட்டமாக ஐந்து வீடுகள் உத்தியோக பூர்வமாகப் பயனாளிகளுக்குக் கையளிக்கப்பட்டன.

திருகோணமலை மக்கள் சேவை மன்றம் கடந்த ஐந்து ஆண்டுகளாக வறுமைக் கோட்டின் கீழ் வாழும் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து கொள்ள முடியாத குடும்பங்களுக்கு வீடுகள், மலசலகூடங்கள், குடி தண்ணீர் வசதிகள் உள்ளிட்ட பல சேவைகளை மேற்கொண்டு வருகின்றது.

மக்கள் சேவை மன்றத்தால் இதுவரை 300 நிரந்தர மற்றும் பாதுகாப்பான வீடுகள் பல்வேறு நிதி அனுசரணையாளர்கள் மூலம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த வீடுகள் கையளிக்கும் நிகழ்வில் மக்கள் சேவை மன்றத்தின் மூத்த ஆலோசகர் பிரகலநாதன், மன்றத்தின் திட்ட உத்தியோகத்தர் குவைசிர், நிதி நிர்வாக உத்தியோகத்தர் கிரிஷ்ணவேணி, நிறுவனத்தின் தன்னார்வத் தொண்டர்கள், பயனாளிகளின் குடும்பங்கள் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.










# இந்திய உயர்கல்வி வாய்ப்புகள் குறித்த செயலமர்வு தென்கிழக்குப் பல்கலையில்

**(நூருல் ஹுதா உமர்)**

தென்கிழக்குப் பல்கலைக்கழக தொழில் வழிகாட்டல் பிரிவின் ஏற்பாட்டில், உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி எஸ்.எம். ஜுனைடீனின் அனுமதியுடன், தொழில் வழிகாட்டல் பிரிவின் பணிப்பாளர் கலாநிதி எம்.பி.எம். இர்ஷாட்டின் வழிகாட்டலிலும், சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சிப்லியின் நெறிப்படுத்தலிலும், “இந்தியாவில் உயர்கல்வி வாய்ப்புகள்” குறித்த சிறப்பு செயலமர்வு, நேற்று பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீட கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம பேச்சாளராக இந்தியத் தூதர் சுவாமி விபுலாந்தர் கலாச்சார நிலையப் பணிப்பாளர்



பேராசிரியர் கலாநிதி அங்குரன் தத்தா கலந்து கொண்டு மாணவர்களுக்குப் பயனுள்ள உரையை வழங்கினார்.

அவர் தனது உரையில், இலங்கைக்கும் இந்தியாவின் வட கிழக்கு மாநிலமான அசாமுக்கும் இடையிலான வரலாற்றுத் தொடர்புகளை எடுத்துரைத்து, தேயிலைத் தொழில் வளர்ச்சி, பன்முக கலாச்சார ஒற்றுமை போன்றவற்றை மாணவர்களுடன் பகிர்ந்து கொண்டார்.

அத்துடன், இந்திய பல்கலைக் கழகங்களில் சேர்வதற்கான நடைமுறை, விண்ணப்பிக்கும் முறை உள்ளிட்டவை பற்றி விரிவாக விளக்கினார்.

விமான டிக்கெட், தங்குமிடம், கல்விக் கட்டணம், மாதாந்திர உதவித் தொகை என அனைத்தையும் இந்திய அரசு ஏற்றுக் கொள்வது தொடர்பிலும் விளக்கினார்.

இந்த செயலமர்வில், இஸ்லாமிய கற்கைகள் மற்றும் அரபு மொழி பீடத்தின் பதில் பீடாதிபதி கலாநிதி ஏ.எம். றாசிக், விரிவுரையாளர் எம்.எஸ். சனூமி, தொழில் வழிகாட்டி பிரிவின் ஆலோசகர் எல்.ரீ.எம். இயாஸ் உள்ளிட்ட பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் பெரும் எண்ணிக்கையான மாணவர்களும் பங்கேற்றனர்.



# பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மெக்ரான் பிரதமர் மோடியுடன் தொலைபேசி உரையாடல்



பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மெக்ரான், பிரதமர் நரேந்திர மோடியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு உரையாடியுள்ளார்.

உக்ரைன் போரை நிறுத்துவது தொடர்பாக கடந்த 15 ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினும் அமெரிக்காவில் சந்தித்துப் பேசினர். இதைத் தொடர்ந்து கடந்த 18 ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பை, உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி சந்தித்துப் பேசினார். அப்போது பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மெக்ரான் உட்பட ஐரோப்பிய தலைவர்கள் உடன் இருந்தனர்.

இந்த சூழலில் பிரான்ஸ் ஜனாதிபதி மெக்ரான், பிரதமர் நரேந்திர மோடியை நேற்று முன்தினம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். அப்போது உக்ரைன் போர் மற்றும் காசா போர் குறித்து இரு தலைவர்களும் ஆலோசனை நடத்தியுள்ளனர்.

இதுகுறித்து பிரதமர் மோடி சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவில்,

“அமெரிக்கா, ஐரோப்பா, உக்ரைன் தலைவர்களுக்கு இடையே அண்மையில் நடைபெற்ற சந்திப்பு குறித்த தகவல்களை ஜனாதிபதி மெக்ரான் பகிர்ந்து கொண்டார். மேலும் காசாவின் நிலைமை குறித்தும் அவர் எடுத்துரைத்தார். போர்களுக்கு முற்றுப்புள்ளி வேண்டும். உக்ரைன், காசாவில் அமைதி திரும்ப வேண்டும் என்ற இந்தியாவின் நிலைப்பாட்டை ஜனாதிபதி மெக்ரானிடம் எடுத்துரைத்தேன்.

வர்த்தகம், பாதுகாப்பு, சிவில் அணுசக்தி ஒப்பந்தம், தொழில்நுட்பம், எரிசக்தி உள்ளிட்ட துறைகளில் இந்தியா, பிரான்ஸ் இடையிலான உறவு வலுவடைந்து வருகிறது. இந்தியா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு இடையே விரைவில் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாக ஜனாதிபதி மெக்ரான் முழு ஆதரவு அளித்தார்.” என்று குறிப்பிட்டுள்ளார்.

பிரான்ஸ் ஜனாதிபதி மெக்ரான் சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவில்,

“இந்தியா, பிரான்ஸ் இடையே வர்த்தக, பாதுகாப்பு உறவு வலுவடைந்து வருகிறது. ஜி7 கூட்டமைப்புக்கு பிரான்ஸ் தலைமை ஏற்க உள்ளது. இதேபோல பிரிக்ஸ் கூட்டமைப்புக்கு இந்தியா தலைமையேற்க உள்ளது. இதுதொடர்பாக இருவரும் வாழ்த்துகளை பரிமாறிக் கொண்டோம்.” என்று தெரிவித்தார்.

கடந்த 1974 மற்றும் 1998 ஆம் ஆண்டுகளில் அணுகுண்டு சோதனையை இந்தியா நடத்தியது. இந்த காலக் கட்டங்களில் இந்தியா மீது அமெரிக்காவும் ஐரோப்பிய நாடுகளும் பல்வேறு பொருளாதார தடைகளை விதித்தன.

ஆனால் பிரான்ஸ் மட்டும் இந்தியாவுடன் நட்புறவை வளர்த்தது. தற்போது அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், இந்திய பொருள்கள் மீது 50 சதவீத வரியை விதித்துள்ளார். எனினும் பிரான்ஸ் ஜனாதிபதி மெக்ரான் வழக்கம்போல இந்தியாவுடன் நட்புறவைப் பேணி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பிரதமர் குறித்து விஜய் பேச்சுக்கு பா.ஜ.க. நிர்வாகிகள் கண்டனம்

பிரதமரை ‘மிஸ்டர் பி.எம்.’ என்று மதுரை மாநாட்டில் த.வெ.க. தலைவர் விஜய் பேசியதற்கு, பா.ஜ.க. தலைவர்கள் அண்ணாமலை, தமிழிசை சவுந்தரராஜன், ஹெச்.ராஜா, சரத்குமார் ஆகி யோர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

தூத்துக்குடியில் இதுகுறித்து அவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

அண்ணாமலை தெரிவிக்கையில்,

“2026 தேர்தலில் த.வெ.க. – தி.மு.க. இடையே தான் போட்டி என்று விஜய் பேசியுள்ளார். அனைத்து அரசியல் கட்சியினரும் தங்களின் எதிரி தி.மு.க. என்று சொல்வது, மக்களின் மனநிலையைப் பிரதிபலிக்கிறது. மற்றவர்களின் பலவீனத்தை மட்டும்தான் விஜய் பேசியிருக்கிறார். தனது பலத்தைப் பற்றி அவர் பேசவில்லை.

விஜய் மாநாடு நடத்தலாம். ஆனால், வாக்களிக்கும்போது இவர் 5 ஆண்டுகள் அரசியலில் தாக்கு பிடிப்பாரா? என்று மக்கள் யோசிப்பார்கள். முதல்வரை ‘அங்கிள்’ என பேசியது சரியல்ல. பொது இடத்தில் பக்குவமாகப் பேச வேண்டும். தமிழக மக்கள் பா.ஜ.கவை சக்திவாய்ந்த கட்சியாக ஏற்றுக் கொண்டுள்ளனர். கடந்த தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு 18 சதவீதம் வாக்களித்தனர்.” என்கிறார்.

தமிழிசை சவுந்தரராஜன் கருத்து தெரிவிக்கையில்,

“உலக அளவில் பிரதமர் மோடி புகழடைந்து கொண்டிருக்கும்போது, யாரோ ஒருவர் மிஸ்டர் பி.எம். என்று கூப்பிட்டால் மக்கள் ரசிக்க மாட்டார்கள். எழுதிக் கொடுத்தபடி அங்கிள், மிஸ்டர் பி.எம். என்று விஜய் வசனம் பேசியுள்ளார். அவர், அரசியல் ஞானம் பெறவில்லை என்பதற்கு, கச்சதீவை பற்றி பேசியதே உதாரணம். ஒரு கொடியைக்கூட ஒழுங்காக நட



முடியாதவர்கள், மாநாட்டை ஒழுங்காக நடத்த முடியாதவர்கள் எப்படி ஆட்சி நடத்துவார்கள்?.” என்றார்.

ஹெச்.ராஜா குறிப்பிடுகையில்,

“பா.ஜ.க. பற்றி தேவையின்றி விஜய் பேசியுள்ளார். விஜய் முதலில் தமிழக அரசியலை படிக்க வேண்டும். தமிழக ரசிகர்களைப் பிழிந்து பணம் சம்பாதித்ததை தவிர, தமிழகத்துக்கு விஜய் என்ன செய்துள்ளார்? கொள்கை ரீதியாக பா.ஜ.க. எதிரி என்கிறார், அவருக்கு என்ன கொள்கை இருக்கிறது? பா.ஜ.கவை பற்றி தவறாக விமர்சனம் செய்ய வேண்டாம் என அவரை எச்சரிக்கிறேன்.” என்றார்.

நடிகர் சரத்குமார் கருத்து தெரிவிக்கையில்,

“நடிகர்கள் அரசியலுக்கு வருவதை வரவேற்கிறேன். குறிப்பாக, இளைஞர்கள் அரசியலுக்கு வர வேண்டும். ஆனால், அரசியல் பாடம் கற்றுக்கொண்டு, என்ன பேசுகிறோம், எதற்காக பேசுகிறோம் என்பதைப் புரிந்து கொண்டு, கொள்கை ரீதியாகப் பேச வேண்டும். மிஸ்டர் பிரைம் மினிஸ்டர் என்று கூறும் அளவுக்கு விஜய் வளர்ந்து விடவில்லை.” என்றார்.




# வெற்றுக் கூச்சல்களும், ஆரவாரங்களும்; த.வெ.க மாநாடு குறித்து திருமாவளவன்

2 மாநில மாநாடுகள் நடத்தியபின்பும் கட்சியின் கொள்கைக் கோட்பாடு என்பது அவர்களுக்கே இன்னும் புரியவில்லை என்று த.வெ.கவினர் குறித்து வி.சி.க. தலைவர் திருமாவளவன் விமர்சித்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

“தமிழக வெற்றிக் கழகத்தின் 2 ஆவது மாநில மாநாடு வெற்றுக் கூச்சல்களுக்கும், ஆரவாரங்களுக்கும் அடையாளமாக இருந்தது. உருப்படியாக எந்த கொள்கைக் கோட்பாட்டு முழக்கங்களும் இல்லை. ஆக்கப்பூர்வமான எந்த செயல்திட்டங்களும் அறிவிக்கப்படவில்லை. தி.மு.க. வெறுப்பு, தி.மு.க. வெறுப்பு, தி.மு.க. வெறுப்பு என்பதே அவர்கள் உமிழ்ந்த அரசியல்.

ஆட்சிக்கு வருவோம் என்ற பகல் கனவை கூச்சல்களாக முழங்கியதுதான் அங்கே நடந்தது. 2 மாநில மாநாடுகள் நடத்தியபின்பும் கட்சியின் கொள்கைக் கோட்பாடு என்பது அவர்களுக்கே இன்னும் புரியவில்லை. இத்தனை லட்சம் பேரை திரட்டி வெறும் சவடால்களை மட்டுமே முன்வைத்திருக்கிறார். அவருடைய பேச்சில் ஆக்கப்பூர்வமான கருத்துகளும் இல்லை, கருத்தியலும் இல்லை.” என்று தெரிவித்தார்.

# நிபந்தனையை ஏற்காவிட்டால் காசா நகரம் அழிக்கப்படும்

## ஹமாஸுக்கு இஸ்ரேல் எச்சரிக்கை



இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்தின் காசாவை ஆளும் ஹமாஸ் தீவிரவாதிகளுக்கும் இடையே இரண்டாம் கட்ட போர் நிறுத்தம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இதில் இஸ்ரேல் விதித்த நிபந்தனைகளை ஹமாஸ் ஏற்க மறுத்தது. இதையடுத்து காசா மீது இஸ்ரேல் மீண்டும் தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்நிலையில் இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ் நேற்று எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில்,

“போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கான இஸ்ரேலின் நிபந்தனைகளை ஹமாஸ் ஏற்காவிட்டால் குறிப்பாக அனைத்து பணயக் கைதிகளையும் விடுவித்து, ஆயுதக்குறைப்புக்கு முன்வராவிட்டால் ஹமாஸின் தலைநகரமான காசா அழிக்கப்படும்.” என்று எச்சரித்துள்ளார்.

காசா நகரை முற்றுகையிட இஸ்ரேல் இராணுவத்துக்கு அனுமதி வழங்கவுள்ளதாக இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு நேற்று முன்தினம் அறிவித்ததை தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இந்நிலையில் காசா நகரை முழுமையாக கைப்பற்றும் முயற்சியில் இஸ்ரேல் இராணுவம் ஈடுபட்டுள்ளது. மக்களை தெற்கே செல்லுமாறு எச்சரித்துள்ளது.



# மேற்கு ஆசியாவிலேயே முதல்முறையாக காசாவில் உணவு பஞ்சம்; ஐ.நா பிரகடனம்

மேற்கு ஆசியாவிலேயே முதல்முறையாக பாலஸ்தீனத்தின் காசாவில் கடும் உணவு பஞ்சம் ஏற்பட்டுள்ளது என ஐ.நா அறிவித்துள்ளது.

சுமார் 5 லட்சம் பேர் அங்கு உணவு தட்டுப்பாட்டை எதிர்கொண்டுள்ளதாக ஐ.நா அமைப்பின் வல்லுநர்கள் கூறியுள்ளனர்.

காசாவில் நிலவும் உணவு பஞ்சம் நிச்சயம் தடுக்கக்கூடிய ஒன்றுதான். இஸ்ரேலின் தடை உத்தரவு காரணமாக பாலஸ்தீனத்தின் அந்த பகுதிக்கு உணவு கொண்ட செல்ல முடியாத சூழல் நிலவுகிறது என்று ஐ.நா நிவாரண உதவி பிரிவின் தலைமை பொறுப்பில் உள்ள தாமஸ் ஃப்ளட்ச்சர் தெரிவித்துள்ளார்.

இதை இஸ்ரேல் வெளியுறவு அமைச்சகம் திட்டவட்டமாக மறுத்துள்ளது. மேலும், காசாவில் உணவு பஞ்சம் எதுவும் இல்லை என்று கூறியுள்ளது. காசாவில் பஞ்சம் என்பது ஹமாஸ் அமைப்பால் பரப்பப்பட்ட பொய்யின் அடிப்படையிலானது எனவும் தெரிவித்துள்ளது..

கடந்த 15 ஆம் திகதி நிலவரப்படி காசா நகரில் உணவு பஞ்சம் ஏற்பட்டுள்ளது ஆதாரபூர்வமாக உறுதி செய்யப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் செப்டம்பர் மாத இறுதியில் காசா முனையின் டெய்ர்-எல்-பலாஹ் மற்றும் கான் யூனிஸ் பகுதியிலும் இந்த நிலை ஏற்படும் என கூறப்பட்டுள்ளது.

காசாவில் தினசரி ஐந்தில் ஒரு வீட்டிலும், மூன்றில் ஒரு குழந்தையிடமும், ஒவ்வொரு பத்தாயிரம் பேரில் இருவர் என பசி காரணமாகவும், ஊட்டச்சத்து குறைபாடு காரணமாகவும் உயிரிழந்து வருகின்றனர் என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2023 ஒக்டோபரில் ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேலில் நடத்திய தாக்குதலால் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் தரப்புக்கு இடையிலான மோதலை மிக தீவிரமாக்கியது.

அதற்கடுத்த இந்த 22 மாதத்தில் மட்டும் இஸ்ரேல் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கை காரணமாக பாலஸ்தீனத்தை சேர்ந்த சுமார் 62,192 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் பொது மக்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நியூயோர்க்கில் சுற்றுலா சென்ற பஸ் விபத்துக்குள்ளானதில் 5 பேர் பலி



அமெரிக்காவின் நியூயோர்க்கில் சுற்றுலா பஸ் விபத்துக்குள்ளானதில் ஐவர் உயிரிழந்துள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பஸ் வேக கட்டுப்பாட்டை இழந்ததால் விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த பஸ்ஸில் இந்தியா, சீனா, பிலிப்பைன்ஸை சேர்ந்த 52 சுற்றுலாப் பயணிகள் பயணித்துள்ளனர்.

நயாகரா நீர்வீழ்ச்சியைப் பார்வையிட்ட பின்னர் சுற்றுலாப் பயணிகள் நியூயோர்க் நகரத்திற்குத் திரும்பிச் சென்ற போது பஃபலோவிலிருந்து கிழக்கே 40 கிலோ மீற்றர் தொலைவில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை அந்நாட்டு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.


பக்கங்கள் 03

கனடா முரசு

சனிக்கிழமை 23/08/2025

## மசாஜ் சிகிச்சையாளர் மீது பாலியல் குற்றச்சாட்டுகள்

கனடாவின் ஒன்டாரியோவின் ஃபோர்ட் எரியில் உள்ள ஒரு சிகிச்சை மையத்தில் பணிபுரிந்த மசாஜ் சிகிச்சையாளர் பாலியல் குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளார் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. 02





# அமெரிக்க பொருள்கள் மீதான வரியை குறைக்கின்றது கனடா

சில அமெரிக்க பொருள்கள் மீதான வரியை குறைப்பதாக கனடா அறிவித்துள்ளது.

கனடா - அமெரிக்கா இடையிலான வர்த்தக பதற்றங்களை குறைக்கும் விதமாக, பில்லயன் டொலர் மதிப்புள்ள அமெரிக்க இறக்குமதி பொருள்களுக்கான வரியை குறைப்பதாக கனடா பிரதமர் மார்க் கார்னி அறிவித்துள்ளார். 02





# கனடாவில் அகதிகள் நிலை கோருகின்ற அமெரிக்கர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு

கனடாவில் அகதி நிலை கோரும் அமெரிக்கர்கள் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்துவருவதாக கனடாவின் புலம்பெயர்தல் மற்றும் அகதிகள் ஆணைய தரவுகள் தெரிவிக்கின்றன.

கனடாவில் அகதி நிலை கோருவோரின் மொத்த எண்ணிக்கையை ஒப்பிடும்போது அமெரிக்கர்களின் எண்ணிக்கை குறைவுதான்.

அகதி நிலை கோரிய 55,000 பேரில் அமெரிக்கர்கள் எண்ணிக்கை 245 மட்டுமே. மேலும் அமெரிக்காவிலிருந்து வந்து கனடாவில் அகதி நிலை கோருவோரில் ஏற்றுக்கொள்ளப்படுவோர் எண்ணிக்கையும் மிகக் குறைவாகவே காணப்படுகிறது.

என்றாலும், இந்த ஆண்டின் முதல் பாதியில் கனடாவில் அகதி நிலை கோரி விண்ணப்பித்த அமெரிக்கர்கள் எண்ணிக்கையைப் பார்க்கும்போது, 2019ஆம் ஆண்டுக்குப் பிறகு கனடாவில் அகதி நிலை கோரி விண்ணப்பித்த அமெரிக்கர்கள் எண்ணிக்கை இப்போதுதான் இந்த அளவுக்கு அதிகரித்துள்ளது.

கடந்த ஆண்டில் 204 அமெரிக்கர்கள் கனடாவில் அகதி நிலை கோரி விண்ணப்பித்தார்கள்.

ட்ரம்ப் முதல் முறை ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டபோதும் கனடாவில் அகதி நிலை கோரி விண்ணப்பித்தவர்கள் எண்ணிக்கை அதிகரித்தது.

கனடாவில் அகதி நிலை பெறவேண்டுமானால், அகதி நிலை கோரி விண்ணப்பிப்போர் அமெரிக்காவில் எந்த இடத்திலும் தங்களுக்கு பாதுகாப்பு இல்லை என கனடாவின் புலம்பெயர்தல் மற்றும் அகதிகள் ஆணையத்தை நம்பவைக்கவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்க பொருள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமெரிக்காவின் புதிய வர்த்தக ஒப்பந்தத்திற்கு இணங்காததை அடுத்து, கனடாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு 35 வீத வரி விதிப்பதாக அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் அறிவித்தார்.

ட்ரம்பின் இந்த நடவடிக்கைக்கு பதிலடியாக, ஒ ரஞ்சு ஜுஸ் முதல் சலவை இயந்திரம் வரை கிட்டத்தட்ட 30 பில்லியன் கனேடிய டொலர் மதிப்பிலான பொருள்களுக்கு 25 வீத வரியை பிரதமர் மார்க் கார்னி அறிவித்தார்.

இந்நிலையில் தற்போதைய புதிய அறிவிப்பானது, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் கனேடிய பிரதமர் மார்க் கார்னி இடையிலான தொலைபேசி பேச்சுவார்த்தைக்கு பிறகு வந்துள்ளது.

இருப்பினும் வாகனங்கள், அலுமினியம் மற்றும் எஃகு ஆகிய பொருள்களுக்கான வரிகள் தொடர்வதாக மார்க் கார்னி அறிவித்துள்ளார்.

புதிய வரி குறைப்பு நடவடிக்கை குறித்து பிரதமர் கார்னி வெளியிட்ட தகவலில், கனடா, அமெரிக்கா மற்றும் மெக்சிகோ ஆகிய நாடுகளுக்கு இடையே இந்த மாற்றம் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்திற்கு வழிவகுக்கிறது என தெரிவித்துள்ளது.

வரி குறைப்பு நடவடிக்கையானது, இருநாடுகளுக்கு இடையே இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கான சுதந்திரமான வர்த்தகங்களை மீண்டும் நிலைநிறுத்தும் என கார்னி குறிப்பிட்டுள்ளார்.

இந்த புதிய நடைமுறையானது செப்டம்பர் 1 ஆம் திகதி முதல் அமுக்கு வரும் என கார்னி தெரிவித்துள்ளார்.

## மசாஜ் சிகிச்சை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தனது வாடிக்கையாளர்களில் சிலரை சிகிச்சையின் போது பாலியல் ரீதியாக துன்புறுத்தினார் என அவர்மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

மேற்படி நபருக்கு எதிராக மேலும் பல குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.



59 வயதான இவோ இவானோவ் என்ற அந்த நபரை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

அத்துடன், விசாரணையாளர்கள், மேலும் பாதிக்கப்பட்டவர்கள் இருக்கலாம் என சந்தேகிக்கின்றனர்.

இது தொடர்பாக தகவல் வைத்திருப்பவர்கள் நயாகரா பொலிஸாரை தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது



# கனடாவின் வெளியுறவு அமைச்சர் அனிதா அமெரிக்க வெளியுறவு செயலருடன் சந்திப்பு

கனடாவின் வெளியுறவு அமைச்சர் அனிதா ஆனந்த், வியாழக்கிழமை அமெரிக்க வெளியுறவு செயலர் மார்கோ ரூபியோவை சந்தித்துள்ளார்.

ரஷ்யா–உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டுவருவதற்கான முயற்சியாக இந்த பேச்சுவார்த்தைகள் அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஹெய்ட்டி மற்றும் காஸா நிலைமைகள் குறித்தும் இந்த பேச்சுவார்த்தையின் போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மேற்குக் கரையில் இஸ்ரேல் ஒரு குடியேற்றத் திட்டத்தை அனுமதித்ததற்கு கனடிய வெளியுறவு அமைச்சர் ஆனந்த் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

அவுஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் ஐக்கிய இராச்சியத்தைச் சேர்ந்த 20 பிற வெளியுறவு அமைச்சர்களுடன் இணைந்து இந்த கண்டனம் வெளியிடப்பட்டுள்ளது.

வெளியுறவு அமைச்சர்களின் கூட்டு கடிதத்தில், இந்தத் திட்டம் “இரு–நாடு தீர்வை சாத்தியமற்றதாக்கும்” என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.





